முகத்தை வருடும் மூடுபனிக் குளிரில் சுகத்தைத் தரும் சுதந்திரப் பறவையாய்

'நமக்கான சினிமாவைத் தேடி' என்று ஒரு பேப்பர் இல் தொடர்ந்து எழுதுவதாக ஒருவாக்கு தந்தேன். அதுகுறித்து நண்பர் விளக்கமாக என்னிடம் கேட்டார். உண்மையில் அது குறித்து எப்படி விளக்கப்படுத்துவதென எனக்குத் தெரியவில்லை. 'நமக்கான சினிமாவு'க்கு ஒரு யாப்பு எழுதுவதோ, வரையறை செய்வதோ, வியாக்கியானம் பண்ணுவதோ என் வேலை அல்ல. ஈழத்து /ஈழத்தவர் திரைப்படங்களைப் பார்த்ததில், சலிப்புற்று முன் முயற்சி எடுத்தால் என்ன என்ற, ஆதங்கத்தில் நடந்ததுதான் அப் பயணம். அப்பயணத்தின் முடிவில் சில ஒளிகள் தெரிந்தன. சில வழிகள் புலர்ந்தன. அவை பற்றி இத்தொடரின் முடிவில் சொல்கிறேன். இனி இலக்கை நோக்கிய பயணம் தான் வேண்டப்படுவது. அதற்கு முதலாகவும், முக்கியமாகவும் அமைவது பணம். அதைத் தேடிய பயணமும் தொடர்கிறது?

இப்பத்தி ஒரு புறத்தில் அனுபவப் பகிர்வாக மாத்திரமே அமையும். அவற்றினூடு நமக்கான சினிமாவைத் தேடுவதும் நிகழும். பகிரக் கூடிய அனுபவங்களையும் ஏலவே அறியப்பட்ட நண்பர்களினூடாக பதிவதே இப்பத்தியின் பணி. நான் இறங்கிய அடுத்தநாள் அது தொடங்கியது.

அந்த நாளில் மூன்று மகிழ்வுக்குரிய அனுபவங்கள் கிடைக்கப்பெற்றன. அதுசனிக்கிழமை நாள். காலை பத்து மணிக்கு இயற்கை விரும்பியான அவரை செயற்கைக் கொங்கிறீற் காடுகளுக்கிடையே தேடிக் கண்டு பிடித்தோம். 'ச்சுப்பிரமணிக்குட்டி' நாய் வாசலில் நின்று வரவேற்கவில்லை. நாங்கள் போய் வரவேற்பறையில் காத்து நின்று ஐந்து நிமிடத்திற்கிடையில் அவர் வந்தார். தொப்பி, கறுப்புக் கண்ணாடி, ஜீன்ஸ், டெனிம் சேட் அப்படி வந்தவர் பாலுமகேந்திரா.

ஒருகாலம் எண்பதுகளின் முற்பகுதி பாலுமகேந்திரா என்றால் கட்டுண்டு கிடந்தோம். எம் வளரிளம் பருவத்துக்கு வாய்த்த மகா ஆதர்சம். என்னூரில், எம் குழாத்தில் சிவாஜி, எம்.ஜி.ஆர் என்று கச்சை கட்டி நாம் சண்டை பிடித்ததில்லை. ஏனென்றால் ஒருவன் தவிர அத்தனைபேரும் சிவாஜி சைற் தான். ஆனால் பதின்ம வயதின் ஆரம்பகூற்றில் கே.வி.மகாதேவன், எம்.எஸ்.விஸ்வநாதன் என்று திரை இசையில் கட்சி கட்டினோம். இளையராஜா வந்து அக் கட்சிகளை உடைத்தபின் பாலுமகேந்திரா, மகேந்திரன் என்று கட்சி கட்டினோம். (ஒன்றைக் கவனிக்க பொதுவாக இருவர் பெயர்கள் வரும் போது முதலில் வருவார் கட்சியைக் சார்ந்தவனே. நான். (சிவாஜி, கேவி.மகாதேவன், பாலுமகேந்திரா)

1984 தை நாளில் அரசியல் வேலை காரணமாக 'கள்ளத் தோணி' யில் தமிழ்நாடு சென்ற போது மூவரை கட்டாயம் சந்திக்க வேண்டும் என்று விரும்பினேன். எழுத்தாளர்கள் அசோகமித்திரன், வண்ணநிலவன், மற்றவர் பாலுமகேந்திரா. சந்தித்தேன் அது மகிழ்வுக்குரிய அனுபவம்.

'மூன்றாம் பிறை' திரைப்படத்தில் சிறீதேவிக்கு மூலிகை வைத்தியம் செய்திருந்த கொட்டிலை தன் வீட்டு மொட்டை மாடியில் அமைத்திருந்தார். அந்த வீடு சாலிக் கிராமத்தில் இருந்தது. அந்தக் கொட்டிலில் வைத்து 'மூன்றாம் பிறை' திரைப்படம் உருவான கதை சொன்னார்.

நடிகை ஷோபா அப்போது பாலுமகேந்திராவின் இரண்டாவது மனைவி. ஷோபா மகேந்திரா என்று பெயர். 'மூடு பனி' திரைப்பட விளம்பரத்தில் (விவித்பாரதி வர்த்தக ஒலிபரப்பு)

'முகத்தை வருடும் மூடுபனிக்குளிரில் சுகத்தைத் தரும் சுதந்திரப் பறவையாய் ஷோபா மகேந்திரா' என்றொரு வரி வரும். (நம்மூர் கே.எஸ்.ராஜா போல பிரபு என்பவரின் விளம்பர வசனம் அது) ஷோபா திடீரென ஒருநாள் தற்கொலை செய்து கொண்டார். எங்களுக்கோ மகா அதிர்ச்சி. சரி அது வேறு கதை. பாலுமகேந்திரா தன் உற்ற துணையாக இருந்த என்ன காரணம் என்று சொல்லாமல் கொள்ளாமல் மறைந்த ஷோபாவின் கதையை அடிநாதமாகக் கொண்டு 'மூன்றாம் பிறை' திரைக் கதையை அமைத்திருந்தார். அதனைத்தான் அக் கொட்டிலில் வைத்துச் சொன்னார். அது இன்னும் அவர் மேலான மதிப்பை அதிகரித்தது.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

'மூன்றாம் பிறை' திரைப்படம் தயாரிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டு எனக்குச் சில தர்மசங்கடங்கள் உருவாகின. பாலுமகேந்திரா அதுவரை அழியாத கோலங்கள், மூடுபனி என்னும் இரண்டு திரைப்படங்களையே தமிழில் தந்திருந்தார் இரண்டிலும் பிரதாப் போத்தனும், ஷோபாவும் நடித்திருந்தனர். மூன்றாம் பிறை மூன்றாவது. இதில், வர்த்தக வெற்றிச் சோடிகளான கமல், சிறீதேவி கவர்ச்சி நடனத்திற்கு சில்க்ஸ்மிதா நகைச்சுவைக்கு வை.ஜி. மகேந்திரன் ஆகியோர் நடிக்கின்றனர். என்று வியாபார நோக்கை குறியாகக் கொண்டு படம் தயாரிக்கப்பட்டது. நான் என்ன செய்வேன். எனக்குக்கூட பாலுமகேந்திராவில் மனம் விட்டுப்போயிற்று.

நாம் பாலுமகேந்திராவை அப்படியா பார்த்தோம்? பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவு மேன்மை சொல்கிற 'முள்ளும் மலரும்' திரைப்படம் மழைபெய்தால் வெள்ளத்தில் மிதக்கின்ற ஹரன் தியேட்டரில் வந்திருந்தது. 'மானினமே?' என்ற இளையராஜாவின் பாடலுடன் படம் தொடங்குகிற போதே நான் சிலிர்த்துக் கொள்வேன். மகேந்திரனின் இயக்கத்துக்காகவோ, ரஜினி, ஷோபாவின் நடிப்புக்காகவோ, இளையராஜாவின் இசைக்காகவோ எனக்கு சிலிர்ப்பு வந்ததல்ல. பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவுக்காக.

'அடிபெண்ணே..' என்ற பாடல் காட்சி 'செந்தாழம்பூவில்' என்ற பாடல் காட்சி. இவை பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவு வன்மையை கட்டியம் கூறும். குறிப்பாக 'அடி பெண்ணே..' பாடல் காட்சி. தான் சிறந்த ஒருவனால் காதலிக்கப்படுகிறேன் என்று நாயகி உணர்ந்த கணத்தில் மனம் அடைந்த குதூகலம் அதை பாலுமகேந்திரா ஒளிப்பதிவு நுட்பத்தால் அக்காட்சியை செதுக்கியிருப்பார். நாயகியுடன் சேர்ந்து இயற்கையே குதூகலிக்கும். நீரும், குளமும், காற்றும் மலரும், மரமும் யாவும் ஆனந்தத்தில் திளைக்கின்றன.

இத்திரைப்படக் காட்சியை இன்னும் இரண்டு திரைப்படக் காட்சிகளுடன் ஒப்பிட்டேன். ஒன்று கே. பாலச்சந்தரின் 'அவர்கள்' திரைப்படக் காட்சி. அத்திரைப்படத்தின் நாயகியை ஒருவன் திருமணம் செய்ய சம்மதமா? என்று கேட்கிறான். அவளுக்கு வந்த குதூகலம், பாடலாக வெளிப்படுத்தப்படுகிறது.

'காற்றுக்கென்ன வேலி கடலுக்கென்ன மூடி
கங்கைவெள்ளம் செம்புக்குள்ளே அடங்கிவிடாது
மங்கை உள்ளம் துள்ளும் போது விலங்குகள் ஏது?'

கண்ணதாசன் தன் கவித்துவ ஆற்றலால் இக் குதூகலத்தைக் காட்டி விடுகிறார். கே.பாலச்சந்தரின் காட்சி அமைப்பில் இக்குதூகலம் வெளிப்படவில்லை.

மற்றைய திரைப்படம் பாரதிராஜாவின் 'புதிய வார்ப்புகள்' இங்கும் இப்படி ஒரு சூழ்நிலை உருவாகிற போது 'தனனம் தனனம் தனனம்' என்று பத்து பதினைந்து பெண்கள் வெள்ளை ஆடை உடுத்தியபடி ஆடிக் கொண்டு ஓடி வருவார்கள். குதூகலத்தை வெளிப்படுத்த பாரதிராஜா கையாண்ட உத்தி அது.

ஆனால், பாலுமகேந்திரா வழி மகேந்திரன் கையாண்ட உத்தி சினிமா மொழியின் பாற்பட்டது. அதனால் தான் நான் பாலுமகேந்திராவையும், மகேந்திரனையும் மிக மிக இரசித்தேன். மெச்சினேன்.

எலைஷா மான்:

பிரத்தானியாவின் முதல் தமிழ் பெண் மேயர்

கோபி

(ஒரு பேப்பர்)

தென்கிழக்கு லண்டனில் உள்ள சதக் உள்ளூராட்சி சபையின் மேயராக செல்வி. எலைஷா பாக்கியதேவி மான் அவர்கள் தெரிவாகியுள்ளார். அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜன நாயகக்கட்சியின் சார்பில் போட்டியிட பராக் ஒபமா தெரிவாகியுள்ளமை அங்குள்ள சிறுபான்மை இனத்தவர் மத்தியில் எத்தனை மகிழ்ச்சியை கொடுத்திருக்குமோ, அத்தனை மகிழ்ச்சியை செல்வி மான் அவர்களது தெரிவு பிரித்தானியாவில் வாழும் தமிழர்களுக்கு கொடுத்துள்ளது.

தமிழ் மனிதவுரிமை மையம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், 'சஸ்ரெயின்' அமைப்பு போன்ற தொண்டு நிறுவனங்களில் மூலம், தாயகம் நோக்கிய செய்பாடுகளில் அவர் தன்னை முழுமையாக இணைத்து செயற்பட்டு வந்த செல்வி மான் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். மான் அக்கா அல்லது மிஸ் மான் என தமிழர்களால் அன்போடு அழைக்கப்படும் அவர், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக தேசிய விடுதலைப்போராட்டம் தொடர்பான பல்வேறு அரசியல் மற்றும் மனிதநேயப் பணிகளில் முன்னின்று உழைத்திருக்கிறார்.

தாயகம் கிளிநொச்சியில் பிறந்த செல்வி மான் அங்குள்ள புனித தெரசா பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் பின்னர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தொடர்ந்தார்.

எழுபதுகளில் இங்கிலாந்துக்கு வந்து, தேசிய சுகாதார சேவையில் இருபத்து ஐந்து வருடகாலம் பணிபுரிந்தார். உடலநலக் குறைபாடு காரணமாக பணி ஒய்வினைப்பெற்றுக் கொண்ட அவர் 2002ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் தென்கிழக்கு லண்டன் சதக் உள்ளூராட்சி சபையின் Riverside வட்டாரத்தில் லிபரல் டிமொக்கிரட் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இக்காலகட்டப் பகுதியில் தாயகத்தில் ஏற்பட்ட சுமூக நிலையை சாதகமாகப் பயன்படுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் மாணவர்களின் கல்விக்கு மின்சாரம் பெறுவதற்காக சூரிய வலுவில் மின்சாரம் பெறும் அலகுகளை நிறுவும் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தினார்.

2006ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் மீள வெற்றி பெற்று உதவி மேயராகவும் தெரிவு செய்யப்பட்டார். செல்வி மான் அவர்கள் தமிழர் அமைப்புகளில் பணியாற்றியதை காரணங்காட்டி அவரை பயங்கரவாத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தமையினால் அவருக்கு முறைப்படி கிடைக்க வேண்டிய மேயர் பதவி ஒரு வருடம் தாமதமாக இப்போது கிடைத்திருக்கிறது. இருப்பினும் எதிரணி (கொன்சவேர்ட்டிவ்) உறுப்பினர்களின் ஆதரவுடன் அவர் இம்மாதம் சதக் பிரதேசத்திற்கான மேயராக தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது அவர்மீது உள்ளூர் அரசியல்வாதிகள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிக்காட்டி நிற்கிறது. செல்வி மான் மேயர் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதை தடுப்பதற்கு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சில புல்லுருவிகளின் உதவியுடன் சிறிலங்கா தூதரகம் பகீரத பிரயத்தனம் மேற்கொண்ட போதும் எதுவும் பலனளிக்கவில்லை.

இங்கிலாந்தில் மேயர் பதவிக்கு தெற்காசிய இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் முதன் முதலாக இவ்வருடம் தெரிவு செய்யப்பட்டார் செல்வி. மான் அவர்களது தெரிவு இரண்டாவதாக அமைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் அதிகம் குடியிருக்காத பிரதேசம் ஒன்றில் அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதன் மூலம், அவருக்கு பல்லின மக்களினது ஆதரவு உள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அனைவருக்கும் பணிபுரிய வேண்டிய கடமை செல்வி மான் அவர்களுக்கு இருக்கிறது. இருப்பினும் அல்லலுறும் ஈழத்தமிழருக்கு அவரது பணி இன்னமும் தேவைப்படுகிறது. மேயரின் பதிவிக்காலம் ஒரு வருடமே என்பதனால், அப்பதவிக்காலம் முடிவடைந்ததும் மீள அவர் தங்களோடு கரங்கோப்பார் என இங்குள்ள தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவரை நெஞ்சார வாழ்த்தி நிற்கும் ஒரு பேப்பர் ரின் எதிர்பார்ப்பும் அதுவே.

By Air or **By Sea** Weekly Sailings
TRY US and see the ***difference***

TRICO - *The name you can trust*

இலங்கை உட்பட 28 நாடுகளில் ட்ரைகோ 43 கிளைகள்
கொழும்பு காலி குருநாகலில் எமது சுங்க இணைக் களஞ்சியங்கள்

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்

*Bring your goods and do the packing in our warehouse itself, thereby saving money, **you spend on transporting.***

One T-Chest to **Sri Lanka - Only £10:** Transit Time Only **18 days**
Two T-Chests to **Chennai – Only £85:** Transit Time Only **27 days.**
Two T- Chests to **Cochin – Only £95:** Transit Time Only **27 days.**

Open 6 days a week!

TRICO
T: 020 8888 8787 F: 020 8889 5445
Email: dilan@tricoshipping.com
www.tricoshipping.com

Trico Shipping and Forwarding Ltd.
555 Whitehart Lane, London. N17 7RP